| | | |
|---|---|---|
| அலகு 15 : உயிர்க்கோளம் I | | |
| எதிர்பார்க்கை வினாக்கள் - கடந்தகால வினாக்கள் | | |
| தரம் 11 | விஞ்ஞானம் | 2022-2023 |

## பகுதி 1

01) மாணவன் ஒருவன் ஒரு சூழற் கூம்பகத்திலிருந்து பிரித்தெடுத்தவாறு அச்சூழற்றொகுதியில் ஓர் உற்பத்தியாக்கியும் எட்டு முதன்மை நுகரிகளும் இருபத்து மூன்று துணை நுகரிகளும் உள்ளன. அவன் இத்தகவலைப் பிரத்தெடுத்திருப்பது

(1) நிமிர்ந்த எண்ணிக்கைக் கூம்பகதத்லிருந்து
**(2) தலைகீழான எண்ணிக்கைக் கூம்பகத்திலிருந்து**
(3) நிமிர்ந்த உயிர்த்திணிவுக் கூம்பகத்திலிருந்து
(4) தலைகீழான உயிர்த்திணிவுக் கூம்பகத்திலிருந்து

(2020/7)

02) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக

A - ஓர் உணவுச் சங்கிலி வழியே உயிர்ச் செறிவடைதல் நடைபெறுகின்றது.
B - உணவுச் சங்கிலியின் உயர்போசணை மட்டங்களில் நச்சு இரசாயன மாசாக்கிகள் அதிகளவில் செறிந்திருக்கும்.

மேற்குறித்தவற்றில்,

**(1) A,B ஆகிய இரு கூற்றுகளும் உண்மையானவை.**
(2) கூற்று A உண்மையாக இருக்கும் அதேவேளை கூற்று B பொய்யானது.
(3) கூற்று A பொய்யாக இருக்கும் அதேவேளை கூற்று B உண்மையானது.
(4) A.B ஆகிய இரு கூற்றுகளும் பொய்யானவை.

(2020/39)

03) ஒரு குளத்திற்கு அண்மையில் ஒரு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்து ஒரு வாக்கியம் உருவில் தரப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்ட மாற்றத்திற்கு அக்குளத்துடன் தொடர்புபட்டு நடைபெறும் பின்வரும் எந்த மனித செயற்பாடு கூடியளவில் பங்களிப்பு செய்கின்றது?

**“ இக்குளத்தின் நீரின் நிறத்தை நீங்கள் பச்சை நிறமாக்கி உள்ளீர்கள்”**

(1) குளத்திற்கு மேலே உள்ள பகுதியை வெட்டித் துப்பரவாக்குதல்
(2) மீன்பிடிக்கப்படுகின்றமையால் அல்காக்களின் எண்ணிக்கை அதிகரித்தல்
(3) வாகனங்கள் கழுவப்படுகின்றமையால் எண்ணெய்யும் கொழுப்பும் சேருதல்
**(4) மலமும் கழிவுப்பொருள்களும் நீருடன் சேர்தல்**

(2020/40)

04) உணவு மைலின் அளவைக் குறுகியதாக்கிக் கொள்வதன் நோக்கம்

(1) தேசிய உணவை மக்கள் அதிகளவில் நுகரச் செய்தல்
(2) தரமான உணவை உட்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்.
(3) பிரதேச வாரியாக உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய உணவுகளிற்கு அதிக கேள்வியைப் பெற்றுக் கொடுத்தல்.
**(4) உணவுகளைக் கொண்டு செல்லும்போது பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவை இழிவளவாக்கல்**

(2019/ 40)

05) உயிரியல் நிலைப்படுத்தலுக்கு பின்வரும் எவ்வட்டத்தின் சமநிலை பேணப்படுதல் முக்கியத்துவம் வாய்ந்தது?

(1) காபன் வட்டம் **(2) நைதரசக் வட்டம்**
(3) பொசுபரசு வட்டம் (4) நீர் வட்டம்


(2019/ 02)

06) கீழே தரப்பட்ட வாயுக்களில் ஓசோன் படலம் வறிதாவதற்கு (சிதைவடைவதற்கு) அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது எது?

**(1) CFC வாயுக்கள்** (2) $NO_2$ வாயு (3) $CH_4$ வாயு (4) $CO_2$ வாயு

(2019/ 35)

07) ஒரு குளத்தின் மடைக்கு அண்மையில் குளச்சுவருக்குக் குறுக்கே உள்ள ஒரு குறுக்குவெட்டு உருவில் காட்டப்பட்டுள்ளது. (2018/37)




குளத்தின் நீரை வெளியேற்றுகையில் அமுக்கத்தைக் குறைப்பதன் மூலம் நீராவியின் கதியைக் குறைப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்பு யாது?

(1) A (2) B **(3) C** (4) D

08) ஒரு காட்டில் மரங்களை வெட்டிய பின்னர் நடைபெறும் சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட்டின் சதவீதம் குறுகிய காலத்தில் உயர்வதற்கு அதிகளவில் பங்களிப்பு செய்வது யாது?

(1) அப்பிரதேசத்தில் காய்கறிகளைப் பயிரிடுதல்
(2) வெட்டிய பகுதிகளை இயற்கையாகப் பிரிகையடையவிடுதல்
(3) மரப்பகுதிகளை கட்டட அமைப்புக்குப் பயன்படுத்துதல்
**(4) வெட்டிய பகுதிகளை எரித்தல்**

(2018/38)

09) அழியும் அச்சுறுத்தலுக்கு ( Endangered) உட்பட்ட தாவரங்களையும் விலங்குகளையும் விற்பனை செய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள் இடம்பெறும் உடன்படிக்கை தொடர்பாக ஒரு மாநாட்டை 2019 மே/ஜுன் மாதங்களில் இலங்கையில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட அந்த உடன்படிக்கைக்கு வழங்கும் பெயர் (2018/39)

(1) Ramsar (2) Montrel **(3) CITES** (4) Reo

10) கழிவுப்பொருள்களை / சக்தியை முகாமைக்கையில் பயன்படுத்தப்படும் கோட்பாடுகளில் இழிவளவாக்கல் (Reduse) , மறுபடியும் பயன்படுத்தல் (Reuse) , மீள்சுழற்சி (Recycle) ஆகிய மூன்று ஆகும் இங்கு பின்வரும் எது இழிவளவாக்குவதற்கு உகந்த உதாரணம் ஆக அமைவது இல்லை.

(1) தேவையற்ற மின்குமிழ்களை அணைத்து விடுதல்
(2) பரிமாறிய எல்லா உணவுகளையும் உண்ணல்
(3) அநாவசியமாக திறந்துள்ள நீர்த்திருகுபிடியை மூடிவிடுதல்
**(4) பொலித்தீன் நுகர்ச்சியை தவிர்த்தல்.** (2018/40)

11) கீழே தரப்பட்டுள்ள உணவுச்சங்கிலிகளில் வினைத்திறன் மிக்க உணவுச் சங்கிலியைத் தெரிவு செய்க.

**(1) புல் ⟶ மான் ⟶ புலி**
(2) கரட் ⟶ முயல் ⟶ மலைப்பாம்பு ⟶ பருந்து
(3) புல் ⟶ வெட்டுக்கிளி ⟶ எலி ⟶ நாகம் ⟶ பருந்து
(4) நெல் ⟶ எலி ⟶ கொண்டைக்குரவி ⟶ பருந்து

(2017/21)

12) பின்வரும் செயல்களைக் கருதுக.

A - உணவு மைல்களைக் குறைத்தல் B - சக்தியை முகாமை செய்தல்
C - பாரம்பரிய அறிவையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துதல்

மேற்குறித்தவற்றுள் இலங்கையில் பேண்தகு அபிவிருத்திக்கு முக்கியமாக அமையும் செயல்கள்

(1) A,B ஆகியன மாத்திரம் (2) B,C ஆகியன மாத்திரம்
(2) A,C ஆகியன மாத்திரம் **(4) A,B,C ஆகிய எல்லாம்**


(2017/40)

13) பின்வருவனவற்றில் எது தொற்றுநீக்கியாகப் பயன்படுத்தலாம்?

(1) **குளோரீன்** (2) அயடீன் (3) போரிக்கமிலம் (4) மகனீசியம் ஐதரொட்சைட்டு

(2016/08)

14) இங்கு காணப்படும் உணவுவலையில் உள்ள மூன்றாம்படி நுகரி யாது?




(1) சேவல்
(2) மலைப்பாம்பு
**(3) பருந்து**
(4) பூனை

(2016/12)

15) குருநாகல் நகரத்தில் வதியும் அனில், ஜகத், சுஜித், நாமல் ஆகியோர் ஒரு குறித்த தினத்தில் உட்கொண்ட காலை உணவு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பெயர் | அனில் | ஜகத் | சுஜித் | நாமல் |
|---|---|---|---|---|
| உணவு | சோறு | இடியப்பம் (அரிசிமா) | பாண் (கோதுமை மா) | ரொட்டி (கோதுமை மா) |
| | பருப்புக்கறி | பருப்புக்கறி | பருப்புக்கறி | உருளைக்கிழங்குக் கறி |
| | தேங்காய்ப்பூச்சம்பல் | மீன்கறி | தேங்காய்ப்பூச்சம்பல் | தேங்காய்ப்பூச்சம்பல் |

மேற்குறித்த உணவுகளுக்காக அரிசியும் தேங்காயும் குருநாகல் பிரதேசத்திலிருந்தும், உருளைக்கிழங்கு நுவரெலியாப் பிரதேசத்திலிருந்தும், மீன் நீர் கொழும்புப் பிரதேசத்திலிருந்தும், பருப்பு இந்தியாவிலிருந்தும், கோதுமைமா அமெரிக்காவிலிருந்தும் பெறப்பட்டுள்ளன.

இவற்றுள் குறைந்த உணவுமைல் உள்ள உணவை எடுப்பவர் யார்?

(1) **அனில்** (2) ஜகத் (3) சுஜித் (4) நாமல்

(2016/ 40)

16) இலங்கையில் ஹக்கல தாவரவியற் பூங்காவில் சில தாவரங்கள் கண்ணாடி வீட்டில் வளர்க்கப்படுகின்றன. அக்கண்ணாடி வீடு தாவரங்களிற்கு

(1) போதுமானளவு ஒட்சிசனை வழங்கும் **(2) உகந்த வெப்பநிலையை வழங்கும்**
(2) போதுமான காபனீரொட்சைட்டு வாயுவை வழங்கும் (4) பொதுமான ஒளியை வழங்கும்

(2015/23)

17) மரக்கறி பாத்தியொன்றிலிருந்து வழிந்தோடும் கழிவு நீர் ஆனது நீர் நிலையொன்றுடன் சேரும் இடத்தில் நீரின் மேற்பரப்பின்மீது பச்சைநிறமான படையொன்று மாணவர் ஒருவர் அவதானித்தார். அவதானிப்பிற்கேற்ப அவர் பின்வரும் கூற்றுக்களை முன்வைத்தார்.

A - மரக்கறிச்செய்கைக்கு அசேதனப் பசளைகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

B - பச்சைநிறப் படையில் அல்காக்கள் அதிகளவில் செறிந்திருக்கும்.

C - நீர் நிலையிலுள்ள நீரின் BOD பெறுமானம் குறைவடைந்திருக்கும்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் உண்மையானவை

(1) **A,B ஆகியன மாத்திரம்.** (2) A,C ஆகியன மாத்திரம்.
(3) B,C ஆகியன மாத்திரம். (4) A,B,C ஆகியன எல்லாம்

(2015/24)

18) ஆட்பதிவுத் திணைக்களம் இலங்கை குடிமக்களுக்கு இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளது. இது பின்வரும் எந்த தொழில் நுட்பத்தின் ஒரு விளைவு எனக் கருத முடியும்?

(1) **தகவல் தொழில்நுட்பம்** (2) நனோதொழில்நுட்பம்
(3) மூலக்கூற்று உயிர்த்தொழில்நுட்பம் (4) பிறப்புரிமைப் பொறியியல் தொழில்நுட்பம்

(2015/37)

19) பின்வரும் விடயங்களைக் கருதுக.

P - மனிதன் உட்பட அனைத்து விலங்குகளினதும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல்

Q - காபன் வட்டம், நீர் வட்டம் போன்ற இயற்கை வட்டங்களைப் பேணல்

R - நாட்டின் அழகியல் மற்றும் கலாசார பெறுமானங்களை மேம்படுத்தல்

இலங்கையின் உயிர்ப்பல்வகைமையின் சேவைகளாகக் கருதக் கூடியன

(1) P உம் Q உம் மாத்திரம் ஆகும். (2) P உம் R உம் மாத்திரம் ஆகும்.
(3) Q உம் R உம் மாத்திரம் ஆகும். **(4) P ,Q, R ஆகியன எல்லாம் ஆகும்.**

(2015/38)

20) பூகோள கிராமம் என்னும் எண்ணக்கருவின் கீழ் துரித முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்கும் உலகத்தில் பயன்படுத்திக் கழிக்கப்படுகின்ற தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைபேசிகள், கணினிகள் போன்ற உபகரணங்கள் காரணமாக எழுந்துள்ள சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை மிகவும் வினைத்திறனாகவும் பயனுறுதி வாய்ந்த விதத்திலும் தீர்ப்பதற்கு பின்வரும் எந்த யோசனையை செயற்படுத்தல் பொருத்தமானதாக அமையும்?

(1) இவ்வுபகரணங்களின் பாவனையைக் குறைத்தல்
(2) இவ்வுபகரணங்களின் உற்பத்தி அளவைக் குறைத்தல்
(3) இவ்வுபகரணங்களிற்குப் பதிலாக வேறு பிரதியீடுகளை உருவாக்குதல்
**(4) உற்பத்தியாளர்களினாலேயே அவ் உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு மீள்பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.**

(2015/39)

21) பின்வருவன உயிர்ப்பீடை நாசினிகள் தொடர்பான மூன்று கூற்றுகளாகும்.

A - உயிர்ப்பீடை நாசினிகள் சூழல் நேயமானவை

B - Bacillus thuringiensis என்னும் பற்றீரியாவினால் உருவாக்கப்படும் நச்சு உயிர்ப் பீடைநாசினியாகப் பயன்படுத்தப்படும்.


C - உயிர்ப்பீடைநாசினிகளின் நஞ்சு உணவுச் சங்கிலியின் வழியே ஒன்றுசேர்க்கப்படுவதில்லை.

மேற்தரப்பட்ட கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A ,C மாத்திரம் **(4) A.B.C ஆகிய மூன்றும்.**

(2014/11)

22) இயற்கைக் குடித்தொகையொன்றில் உயிரங்கிகளின் எண்ணிக்கை காலத்தோடு மாறும் கோலம் வரைபில் காட்டப்பட்டுள்ளது. வரைபுக்கமைய பொய்யான கூற்று எது?




(1) சூழலில் உணவு அதிகமாகக் கிடைத்தபோதிலும் அவத்தை 1 இல் மெதுவான வளர்ச்சி வீதம் உள்ளது.
(2) இரைகௌவிகள் காணப்பட்டபோதிலும் அவத்தை 2 இல் துரித வளர்ச்சி வீதமுள்ளது.
**(3) உயிரங்கிகள் சூழலிற்கு நன்கு இசைவாக்கம் அடையாத போதிலும் அவத்தை 3 இல் தரித வளர்ச்சி வீதமுள்ளது.**
(4) வளங்களுக்காக உயிரங்கிகளிற்கிடையே போட்டிகள் இருந்தபோதிலும் அவத்தை 4 இல் சமநிலை ஒன்று உருவாகியுள்ளது.

(2014/ 12)

23) மக்களிடையே சேதன உணவிற்கான கேள்வி (organic food) அதிகரித்தமையினால் இலங்கையின் சில பிரதேசங்களில் மீண்டும் சேதனப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சேதன பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளில் ஒன்று பின்வருவனவற்றுள் எது?

(1) பயிர்ச்செய்கைக்காக அதிகளவு செலவு செய்யவேண்டியிருத்தல்
**(2) பீடைகளைக் கட்டுப்படுத்த சிரமமாக இருத்தல்**
(3) அதிகளவு இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தவேண்டியிருத்தல்
(4) விளைச்சல்களை நீண்ட நாட்களிற்கு வைத்திருக்க முடியாதிருத்தல் (2014/38)

24) கீழே தரப்பட்டுள்ள விடயங்களைக் கருதுக.

P - சனத்தொகை அதிகரித்தல்

Q - தொழில் நுட்பம் துரிதமாக முன்னேற்றம் அடைதல்

R - காலநிலை மாற்றங்கள் ஏற்படுதல்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு அதனது சொந்த இலக்குகளை நோக்கிச் செல்ல வேண்டும் எனின் புதிய மின்வலுச் சக்தி மூலங்களைக் காண்பதற்கு ஏதுவான விடயங்கள்

(1) P,Q மாத்திரம் (2) Q,R மாத்திரம் (3) P,R மாத்திரம் **(4) P,Q ,R எல்லாம்**

(2014/40)

25) வாகன ஊதுகுழல்கள் தொடர்பாக புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாக அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சியினால் எதிர்பார்க்கப்படும் பிரதான இலக்கானது

(1) வீதி விபத்துக்களைக் குறைத்தல் **(2) ஒலி மாசடைதலைக் குறைத்தல்**

(3) சாரதிகளிடையே ஒழுக்கத்தை உருவாக்கல் (4) பாதசாரிகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்

(2013/37)

26) பின்வரும் A,B,C ஆகிய செயற்பாடுகளைக் கருதுக.

A - மென்பானங்களை நிரப்பப் பயன்படுத்தப்படும் கண்ணாடிப் போத்தல்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல்

B - பயன்படுத்தப்பட்ட கடதாசிகளை கடதாசி உற்பத்தியில் மூலப்பொருளாகப் பயன்படுத்துதல்

C - உணவைப் பொதி செய்யப் பயன்படுத்தும் பொலித்தீன் தாள்களிற்குப் பதிலாக சாப்பாட்டுப் பெட்டிகளைப் பயன்படுத்துதல்

தற்போது பயன்படுத்தப்படும் திண்மக் கழிவு முகாமைத்துவ உத்திகளான மீள் சுழற்சி, பாவனையைக் குறைத்தல், மீளப் பயன்படுத்துதல் என்பவற்றிற்கான உதாரணங்கள் முறையே

(1) A,B,C (2) B,A,C **(3) B,C,A** (4) C,B,A

(2013/38)

27) செயற்கை விவசாய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தாமல் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் விவசாயிகளை ஊக்குவிக்கின்றது. இதன்போது மண்ணின் தரம் குன்றாமல் கட்டுப்படுத்தவதற்கும் பீடைத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பிரயோகிக்கப்பட வேண்டிய உத்திகள் எவை?

(1) புதிய வர்க்கங்களின் கலப்புப் பிறப்பாக்கலும் இழைய வளர்ப்பு, பரம்பரையலகுத் தொழிநுட்பம் என்பவற்றைப் பயன்படுத்தலும்.

(2) இயந்திரங்களின் பயன்பாட்டைக் குறைத்தலும் அதிகளவில் விலங்குகளைப் பயன்படுத்தலும்

(3) பாரம்பரிய பயர்களை மாத்திரம் பயிரிடுதலும் கலப்பு உரத்தைப் (Compost) பயன்படுத்தலும்.

**(4) உயிரியல் கட்டுப்பாடு, சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை, பல்லினப் பயிர்ச்செய்கை ஆகியன.**

(2013/39)

28) காலத்திற்குக்காலம் மனித நாகரிகத்தின் பாரிய அபிவிருத்திக்கு, அவ்வக்காலங்களில் நிகழ்ந்த தொழிநுட்ப முன்னேற்றம் காரணமாகும். அவ்வாறானதொரு பாரிய அபிவிருத்திக்கு இன்றைய உலகினை கொண்டு செல்லக் கூடியதென எதிர்பார்க்கப்படும் தொழிநுட்ப முன்னேற்றம் எது?

(1) பிறப்புரிமை பொறியியல் தொழிநுட்பம் (2) இலத்திரனியல் தொழிநுட்பம்

**(3) நனோதொழிநுட்பம்** (4) தகவல் தொழிநுட்பம்

(2013/40)

29) காலநிலை மாற்றக் கோலங்கள் மாறுதல் தற்கால உலகம் எதிர்கொள்ளும் பிரதான சவாலாகும். இதற்கு அதிகளவில் பங்களிப்புச் செய்யும் சூழற் பிரச்சினை யாது?

(1) ஓசோன்படை (விதானம்) வறிதாதல் (2) அமிலமழை உண்டாதல்

**(3) பூகோள வெப்பம் அதிகரித்தல்** (4) நற்போசணையாக்கம்

(2012/37)

30) காட்டுப்பிரதேசங்களின் ஊடாக அதிவேக வீதிகளை (Express ways) அமைக்கும்போது காட்டு விலங்குகள் உலாவித்திரியும் இயற்கைப் பாதைகள் தடைப்படுகின்றன. இது உயிர்ப்பல்வகைமையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதற்கு மிகச்சிறந்த பரிகாரம்

(1) அதிவேக வீதிகளின் இரு பக்கங்களிலும் கம்பிவேலிகளை இடுதல்.

**(2) காட்டுப்பிரதேசங்களில் அதிவேக வீதிகளைத் தூண்களின் மீது அமைத்தல்.**

(3) மண் அணைகளை அமைத்து அவற்றின்மீது அதிவேக வீதிகளை அமைத்தல்.

(4) எப்போதும் அதிவேக வீதிகளைக் காட்டுப் பிரதேசங்களுக்கு அப்பால் அமைத்தல்.

(2012/38)

31) பூந்தல, ஆனைவிழுந்தாவ போன்ற இலங்கையின் கடற்கரைக்கு அண்மையில் உள்ள ஈர நிலங்கள் உலக அருஞ் செல்வங்களாக (பாரம்பரியங்களாக) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. நாட்டுக்குரிய அங்கியினங்கள் இருத்தலும் புலம்பெயரும் பறவைகள் அதிக எண்ணிக்கையில் வருதலும் இவற்றின் சிறப்பியல்புகளாகும். அத்தகைய ஓர் ஈர நிலத்திற்கு நீர்த்திட்டத்திலிருந்து வெளியேறும் நன்னீரை விடும்போது ஏற்படத்தக்க சேதத்தை மிகச் சிறந்த விதத்தில் விவரிக்கும் கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) நன்னீர் கலப்பதனால் ஈர நிலச் சூழலில் உள்ள அங்கிகள் முற்றாக அழிகின்றன.
(2) உல்லாசப் பயணிகளின் வருகை நிற்கின்றமையால் உல்லாசப் பயணத்தொழில் தகர்வுறுகின்றது.
(3) ஈர நிலங்கள் குறுகிய காலத்தில் முற்றாக நிரப்பப்படுகின்றமையால் நாட்டுக்குரிய அங்கி இனங்கள் அழிகின்றன.
**(4) நாட்டுக்குரிய அங்கி இனங்கள் படிப்படியாக அழிகின்றமையால் புலம்பெயரும் பறவைகளின் வருகை குறைகின்றது.**

(2012/40)

32) மின்னல் ஏற்படும்போது குறைந்த ஆபத்துள்ள சந்தர்ப்பம்.
(1) மைதானத்திற்கு அருகிலுள்ள மரத்தின் கீழே நிற்றல்.
(2) வயலில் வேலை செய்தகொண்டிருத்தல்.
**(3) மோட்டாரக் காரினுள்ளே இருத்தல்**
(4) வீட்டினுள்ளே தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருத்தல்.

(2012/39)

33) 'குடித்தொகை' சரியாக வரையறுக்கப்படுவது
(1) ஒரு குறித்த பிரதேசத்தில் வாழும் எல்லாச் சாகியங்களும் அவற்றுடன் இடைத்தாக்கம் புரியும் உயிரற்ற சூழலும் ஆக
(2) புவி மீது அங்கிகள் பரந்திருக்ககும் வலயமாக
(3) ஓர் அங்கியை இரையாகக் கொள்ளும் வேறு அங்கிகளாக
**(4) ஒரு குறித்த பிரதேசத்தில் குறித்த காலத்தில் வாழும் ஒரே இனத்தின் அங்கிகளாக.**

(2011 /9)

34) ஓசோன்படை வறிதாக்கத்திற்கு உயர்ந்தபட்சம் பின்வரும் எக்கூறு பங்களிப்புச் செய்கின்றது?
(1) அமோனியா ($NH_3$) (2) காபனீரொட்சைட்டு ($CO_2$)
**(3) குளோரபோம் ($CHCl_3$)** (4) மெதேன் ($CH_4$)

(2011/24)

35) அண்மைக்காலத்தில் தலை நகரை அண்டியுள்ள சில பிரதேசங்களில் பல தடவை சடுதியாக வெள்ளம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணமாகிய மனித செயற்பாடு யாது?
(1) பொலித்தீனைப் பயன்படுத்தல் (2) காடுகளை அழித்தல்
**(3) ஒழுங்கற்ற நிர்மாணிப்புகள்** (4) ஒழுங்கற்றவாறு குப்பை கூழங்களை அகற்றல்

(2010/38)

36) மனித செயற்பாடுகள் காரணமாக இயற்கைச் சூழலின் சமநிலை விரைவாக மாறிப் பாதக விளைவாக வளிமண்டல ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம். இதனால் மனிதனில் நேரடியாக ஏற்படும் பாதக விளைவு எது?
(1) பூகோள வெப்பமாதல் (2) கடல் நீர் மட்டம் உயர்தல்
(3) சுவாச நோய்களிற்கு ஆளாதல் **(4) தோல் புற்றுநோய்க்கு ஆளாதல்**

(2009/40)

37) உயிர்ப்பல்வகைமையின் அழிவிற்கு அதிக அளவில் பங்களிப்பு செய்யும் மனித செயற்பாடு எது?
1) அளவுக்கு அதிகமாக வேட்டடையாடுதல் **2) வாழிடங்களை அழித்தல்**
3) உயிர்ச்சுவடு எரிபொருள்களை எரித்தல் 4) பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தல்

(2008/7)

38) வயலில் மண்ணின் நைதரசன் அளவு குறைவதற்கு ஏதுவான செயன்முறை யாது?
1) நைத்திரேற்றாக்கல் 2) இரசாயன வளமாக்கிகளைப் பிரயோகித்தல்
**3) அறுவடையை அகற்றல்** 3) பின் அறுவடை மீதிகளை மண்ணுடன் சேர்த்தல்

(2008/8)

39) இலங்கையில் சில பிரதேசங்களில் நிலக்கீழ் நீரிலுள்ள ஒரு குறித்த மூலகம் மனிதனின் பற்களில் கபில நிறம் ஏற்படக் காரணமாக உள்ளது. அம்மூலகம் யாது?
1) **புளோரீன்** (2) குளோரின் (3) சோடியம் (4) கல்சியம்

(2008/39)

**2022**

A,B,C,D எனும் நான்கு வீடுகளில் சக்தி பெறப்படும் முறை, ஒளியேற்றும் உபகரணங்கள், சமைக்கும் உபகரணங்கள் என்பன பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வீடு | சக்தி பெறப்படும் முறை | ஒளியேற்றும் உபகரணங்கள் | சமைக்கும் உபகரணங்கள் |
|---|---|---|---|
| A | சூரிய கலங்கள் | CFC குமிழ்கள் | LP வாயு அடுப்பு |
| B | தேசிய மின்வலு நெய்யரி | இழைக் குமிழ்கள் | மின்வெப்பமாக்கி/மின்னடுப்பு |
| C | மின் பிறப்பாக்கி | புளொரொளிர்வு விளக்குகள் | மண்ணெண்ணெய் அடுப்பு |
| D | உயிர்வாயு அலகு | உயிர்வாயு விளக்குகள் | விறகு அடுப்பு |

(01) எந்த வீட்டில் சக்தியை பெறும் முறையாகப் புதுப்பிக்க முடியாத சக்தி முதல் மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது?

1) A 2) B **3) C** 4) D

(02) தகாத விதத்தில் சூழலுக்கு விடுவிக்கப்படும்போது மண்ணையும் நீரையும் மாசுபடுத்துவதற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்யும் ஒளியேற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படும் வீடுகள் யாவை?

**1) A,C ஆகியன** 2) A,D ஆகியன 3) B,C ஆகியன 4) B,D ஆகியன

(03) வீட்டினுள்ளே உள்ள வளியை மாசுபடுத்துவதற்குக் குறைந்தபட்சம் பங்களிப்புச் செய்யும் சமைக்கும் உபகரணம் பயன்படுத்தப்படும் வீடு யாது?

1) A **2) B** 3) C 4) D

(04) மின் நெருக்கடிக்கும் எரிபொருள் நெருக்கடிக்கும் மிகவும் நடைமுறையான தீர்வுகளை எடுத்துள்ள வீடு யாது?

1) A 2) B 3) C **4) D**